**செ. கு. எண்:083** **நாள்: 12.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 12.6.2017

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வாணியக்குடி மீன்பிடி கிராமத்தை சேர்ந்த திரு. எர்னஸ்ட் என்பவருக்கு சொந்தமான மீன்பிடி விசைபடகில் அவருடன் 13 மீனவர்களும் 8.6.2017 அன்று கேரளாவின் கொச்சின் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்க சென்றனர். 10.6.2017 அன்று அவர்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது, சரக்குக் கப்பல் மீன்பிடி விசைப்படகின் மீது மோதியதில், அவ்விசைப்படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், படகிலிருந்த 14 மீனவர்களும் கடலில் காயங்களுடன் தூக்கி எறியப்பட்டதில், 11 மீனவர்களை அருகாமையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சக மீனவர்கள் மீட்டு கரை சேர்த்துள்ளனர்.

இந்த விபத்தில் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் மீன்பிடி கிராமத்தை சேர்ந்த திரு. ஆன்டனி ஜான் த/பெ திரு. ஜோஸ் அலெக்சாண்டர் என்பவரும் அசாம் மாநிலத்தை சார்ந்த மற்றொரு மீனவரும் இறந்துள்ளனர். அசாம் மாநிலத்தை சார்ந்த காணாமல் போன இன்னொரு மீனவரை தேடும் பணி நடைபெற்று வருகிறது என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த தமிழ்நாட்டை சேர்ந்த திரு. ஆன்டனி ஜான் த/பெ திரு. ஜோஸ் அலெக்சாண்டர் என்பவரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**